York Region






## தாய்ப்பாலூட்டுதல் குறித்து யோர்க் பிராந்திய சமூகநல சேவைகள் பிரிவின் கோட்பாடு

தாய்ப்பாலூட்டுதல், குழந்தைகளுக்கும் இளம் சிறார்களுக்கும் மிகவும் ஆரோக்கியமானதும், தாய்மார்கள், பிள்ளைகள், மற்றும் சமூகங்களினது உடல்நலத்திற்கு மிகவும் இன்றியமையாததுமான ஒரு வழிமுறையாகும். தங்களுடைய குழந்தைகளுக்கும், இளம் சிறார்களுக்கும் உணவூட்டுதல் பற்றிய சரியான தகவல்களை அறிந்து, முடிவுகளை எடுக்கும் உரிமை குடும்பங்களுக்கு உண்டு என, யோர்க் பிராந்திய சமூகநல சேவைகள் பிரிவு நம்புகின்றது. தங்களுடைய குழந்தைகளுக்குப் பாலூட்டுதல் குறித்துக் குடும்பங்கள் எடுக்கும் எந்த முடிவையும் பணியாளர்கள் குழு ஆதரிக்கும். தாய்ப்பாலூட்டுதல், யோர்க் பிராந்தியத்தின் முழுப் பிரதேசத்திலும் வரவேற்கப்படுகின்றது. எமது பிரிவு குழந்தை-சார் ஊக்குவிப்பு நியமத் திட்டத்தை நிறைவேற்றத் தீவிர முயற்சி மேற்கொள்கின்றது.

### யோர்க் பிராந்திய சமூகநல சேவைகள் பிரிவு, தாய்ப்பாலூட்டுதலுக்குப் பின்வரும் முறைகளில் ஆதரவளிக்கும்

- தாய்ப்பாலூட்டுதலுக்கான தொடர்ச்சியான ஆதரவைக் குடும்பங்களுக்கு வழங்குவதற்காகப் பயிற்றுவிக்கப்பட்ட பணியாளர்களைக் கொண்டிருத்தல்
- தாய்ப்பாலூட்டும் தங்களுடைய குறிக்கோள்களில் வெற்றி பெறுவதற்கு அத்தியாவசியமான தகவல்களை குழந்தைப்பேற்றுக்கு முன்பதாகவும், பின்பும் குடும்பங்களுக்கு வழங்குதல்
- தாய்ப்பாலூட்டுதல் பற்றிய விவரமான தகவல்களையும், ஆதரவையும் தொலைபேசி மூலமாக அல்லது நேரடியாக வழங்கி, தாய்ப்பாலூட்டுதலைத் தொடர்வதற்குக் குடும்பங்களுக்கு உதவுதல்
- ஒரு குழந்தையின் முதல் ஆறு மாத காலத்துக்குத் தாய்ப்பாலை மட்டுமே கொடுப்பதன் அவசியத்தையும், இரண்டு வயதுக்கும் அதற்கப்பாலும், அத்தியாவசியமான கெட்டியான உணவுகளுடன், மேலதிகமாகத் தாய்ப்பாலையும் தொடர்ச்சியாகக் கொடுப்பதன் முக்கியத்துவத்தையும், குடும்பங்களுக்குக் கற்பித்தல்
- குறிக்கப்பட்ட நேரத்துக்கு அப்பாலும் இயங்கும் சேவைகள், மற்றும் மதர்-டு-மதர் (mother-to-mother) குழுக்கள் போன்ற சமூகத்தில் செயற்படும், தாய்ப்பாலூட்டுதலுக்கு ஆதரவளிக்கும் குழுக்களுடன், குடும்பங்களை இணைத்தல்
- ஒரு பெண்ணுக்கு, எவ்விடத்திலும் எந்நேரத்திலும் தாய்ப்பாலூட்ட இருக்கும் உரிமை பற்றிச் சமூகத்துக்கு அறிவுறுத்தல்
- குழந்தைக்குப் பாலூட்டுதல் குறித்து, சரியான தகவல்களை அறிந்து, முடிவுகளை எடுப்பதற்கு, ஆதாரபூர்வமான தகவல்களையும், ஆதரவினையும் குடும்பங்கள் பெற்றுக் கொள்வதனை உறுதிப்படுத்தல்

### யோர்க் பிராந்திய சமூகநல சேவைகள் பிரிவு பின்வருவனவற்றுக்கு ஆதரவளிக்காது

- செயற்கை முறையிலான குழந்தைகளுக்கான-பால்/அது தொடர்பான பாலூட்டற் சாதனங்கள், என்பவற்றை உற்பத்தி செய்யும் வணிக நிறுவனங்களினால், விளம்பர முயற்சிக்காக நன்கொடையாக வழங்கப்பட்ட பொருட்கள் மற்றும் கருவிகளைப் பயன்படுத்தல்
- செயற்கை முறையிலான குழந்தைகளுக்கான-பால்/அது தொடர்பான பாலூட்டற் சாதனங்கள், என்பவற்றை உற்பத்தி செய்யும் வணிக நிறுவனங்களின், ஆதரவுடன் நடைபெறும் கற்பித்தல் முயற்சிகள், அல்லது குழந்தைப் பராமரிப்பு நிகழ்வுகள் போன்றவற்றுக்குச் சமூகமளித்தல், அல்லது அவற்றை அங்கீகரித்தல்
- மருத்துவ காரணங்கள், மற்றும் தாய்ப்பாலூட்டும் மருத்துவமனைப் பகுதியில் மட்டும், என்று சுட்டிக் காட்டப்படாத பட்சத்தில், செயற்கை முறையிலான குழந்தைகளுக்கான பாலைக் குடும்பங்களுக்கு வழங்குதல்
- மருத்துவ காரணங்கள் சுட்டிக் காட்டப்படாத பட்சத்தில், செயற்கை முறையிலான முலைக்காம்புகளை அல்லது பால்குடி முனைகளை, வர்த்தக நோக்குடன் ஊக்குவித்தல் அல்லது விளம்பரப்படுத்தல்

இது, தாய்ப்பாலூட்டுதல் குறித்து யோர்க் பிராந்திய சமூகநல சேவைகள் பிரிவின் கோட்பாடு பற்றிய, ஒரு கையேடு. நீங்கள் இத்தொகுப்பின், அல்லது தாய்ப்பாலூட்டுதல் குறித்த முழுமையான கோட்பாட்டின், ஒரு பிரதியைப் பெற்றுக்கொள்ள விரும்பினால், தயவுசெய்து பணியாளர்கள் குழுவை, அல்லது அதன் உறுப்பினர் ஒருவரை அணுகவும்.

**1-800-361-5653**
TTY (for those with hearing disabilities) **1-866-252-9933**
York Region Health Connection

**Community and Health Services**
Public Health

**www.york.ca**
facebook.com/YorkRegion
@YorkRegionGovt

5877 02 2013 TAMIL